


Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita




## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

# அருள் மொழிகள்



ஸ்ரத்தை” என்கிற சப்தத்திற்கு நிஷ்க்ருஷ்டமான (தெளிவான) அர்த்தத்தை சங்கரபகவத்பாதாள் விவேகசூடாமணியில் கூறியிருக்கிறார்.

*சாஸ்த்ரஸ்ய குருவாக்யஸ்ய ஸத்யபுத்த்யா வதாரண ।*
*ஸா ச்ரத்தா கதிதா ஸத்பிர்யயா வஸ்தூபலப்யதே ॥*

அதாவது சாஸ்திரத்திலும் ஆசார்யாளுடைய வாக்கியத்திலும் மிகவும் பிராமாண்ய புத்தி (உண்மை என்கிற எண்ணம்) இருந்தால் அதற்குத்தான் “ஸ்ரத்தை” என்று பெயர். “சாஸ்திரத்தில் இப்படி இருக்கிறது. அது அப்படித்தான் நடக்கும்” என்ற தீர்மானம் இருக்க வேண்டும். அநேகம் ஜனங்கள், “சாஸ்திரத்தில் கூறியபடி எல்லாவற்றையும் செய்தோம். ஆனால், அதில் சொல்லப்பட்ட காரியம் மட்டும் ஒன்றும் ஆகவில்லை” என்று குறை கூறுவார்கள். இதற்குக் காரணம் அவர்களிடம் ஸ்ரத்தை இருக்கவில்லை என்பதேயாகும். “சாஸ்திரத்தில் என்னவோ இருக்கின்றது. செய்தால் என்ன ஆகுமோ தெரியாது. செய்துதான் பார்ப்போம்” என்ற எண்ணம்தான் அநேகம் ஜனங்களுக்கு இருக்கிறது. “சாஸ்திரத்தில் இப்படி நடக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆசார்யாளுடைய வாயிலிருந்து வந்த வார்த்தையும் அப்படியே இருக்கிறது. ஆதலால் உண்மையில் இப்படித்தான் நடக்கும்” என்ற தீர்மானம் இருக்க வேண்டும். இதற்காகத்தான்

*“ஸத்யபுத்த்யாவதாரணா”*

என்ற பதத்தை சங்கரபகவத்பாதாள் போட்டிருக்கிறார். இம்மாதிரி உறுதியான நம்பிக்கையுடன் காரியம் செய்தவர்களுக்கெல்லாம் உத்க்ருஷ்டமான (உயர்வான) பலன் கிடைத்து விட்டது. இதில் சந்தேகமேயில்லை.

—ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹா ஸ்வாமிகள்

**ஸத் ஸம்ப்ரதாயம்**

An Unit of the e magazine Voice of Jagadguru)

## விதுர நீதி

गतिरात्मवतां सन्तः सन्तएव सतां गतिः ।
असतांच गतिसन्तः नत्वसन्तः सतां गतिः ॥82॥

க³திராத்மவதாம்' ஸந்த: ஸந்தஏவ ஸதாம்' க³தி: |
அஸதாஞ்ச க³திஸந்த: நத்வஸந்த: ஸதாம்' க³தி: ||82||

பிராணிகள் யாவருக்கும் ஸத்துக்களே கதி, ஸாதுக்களுக்கு ஸாதுக்களே கதி, அஸத்துக்களுக்கும் ஸாதுக்கள் தான் கதி, ஒரு போதும் அஸத்துக்கள் ஸாதுக்களுக்கு கதியல்ல.

सभाजिता वस्त्रवता मिष्टाशा गोमता जिता ।
अध्वाजितो यानवता सर्वं शीलवता जितम् ॥83॥

ஸபா⁴ஜிதா வஸ்த்ரவதா மிஷ்டாஶா கோ³மதா ஜிதா |
அத்⁴வாஜிதோ யானவதா ஸர்வம்' ஶீலவதா ஜிதம் ||83||

நல்ல வஸ்திரம் தரித்தவன் சபையை விடுவான். (முன்பின் ஜெயித்து தெரியாதவர்கள் கூட நல்ல வஸ்திரம் தரித்தவனை சபையோர்கள் கௌரவிப்பார்கள் எனக் கருத்து.) நல்ல ஆகாரத்தை விரும்புகிறவன் பசுக்கள் உள்ளவனாய் இருந்தால் அந்த ஆசையைப் பூர்த்தி செய்து கொண்டு விடுவான். நல்ல வாகனம் உள்ளவன் வழியை ஜெயித்துவிடலாம் (வெகுதூரத்துக்கு அப்பால் செல்ல வேண்டுமானாலும் உடன் சென்றுவிடலாம்) நல்ல நடத்தை உள்ளவன் எல்லா உலகங்களையும் ஜெயித்துவிடலாம்.

शीलं प्रधानं पुरुषे तद्यस्येह प्रणश्यति ।
नतस्य जीवितेनार्थः न घनेन नबन्धुभिः ॥84॥

ஶீலம்' ப்ரதா⁴னம்' புருஷே தத்³யஸ்யேஹ ப்ரணஶ்யதி |
நதஸ்ய ஜீவிதேனார்த²: ந க⁴னேன நப³ந்து⁴பி⁴: ||84||

மனிதனுக்கு நல்ல நடத்தையும், நல்ல எண்ணமும் தான் முக்கியமானது. அவைகள் எவனிடம் இல்லையோ, அவனுக்கு உயிரினாலும் பணத்தினாலும், பந்துக்களாலும் ஒரு பயனுமில்லை.

(தொடரும்....)

**ஸத் ஸம்ப்ரதாயம்**

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஆசார்யாளின் உபதேசங்கள்

**(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாசஸ்வாமிகள் அருளியது)**

## 12. இறைவனின் அருள் தேவை



எத்தனையோ இலக்ஷம் ஜீவராசிகள் இருந்தாலும் மனுஷ்யனுக்கு மட்டும் பிராதான்யத்தை (முக்கியத்துவம்) சாஸ்திரத்தில் ஏன் கொடுத்தார்கள்? தன்னுடைய ஆகாரத்தைச் சம்பாதித்துக்கொள்ளும் விஷயத்தில் மனுஷ்யனும் மீதி பிராணிகளும் சமம்தான். சங்கரபகவத்பதாள் **பச்வாதிபி: ச அவிசேஷாத்** என்று சொல்கிறார். பிராணிகளும் நாமும் ஒன்றுதான். எப்படி ஒன்று? அதுவும் தனக்கு யாராவது தீனி கொடுப்பார்கள் என்று தெரிந்தால் அவனிடம் போகும். யாராவது கையில் கம்பு வைத்துக்கொண்டு அடிக்க வருகிறான் என்றால் ஓடிப் போகும். நாமும் அப்படித்தான் இருக்கின்றோம். அவனால் தொந்தரவு என்றால் அவனிடமிருந்து சிறிது தூரத்தில் இருப்போம். இந்த விஷயத்தில் **பச்வாதிபி: ச அவிசேஷாத்** என்று பகவத்பாதாள் சொன்ன மாதிரி, மீதி பிராணிகளுக்கும் நமக்கும் எந்த வித்யாஸமும் இல்லை என்று சொல்ல முடியுமா என்றால், அதுவும் சொல்ல முடியாது; நிச்சயமாக வித்யாஸம் இருக்கின்றது. எந்த விஷயத்தில் வித்யாஸம் இருக்கின்றது என்று கேட்டால், நமக்குப் பெரிய விவேகத்தை பகவான் கொடுத்தான். நம்முடைய விவேகத்தினால் எது ஹிதம் (நன்மை), எது அஹிதம் (தீமை), எது உபாதேயம் (ஏற்றுக் கொள்ள வேண்டியது), எது பரித்யாஜ்யம் (விட்டுவிட வேண்டியது) இத்தனையையும் நாம் தெரிந்துகொள்ளலாம். நம்முடைய புத்தி சக்திக்கு அளவே இல்லை. இந்தக் காலத்தில் விஞ்ஞானிகள் போய்க்கொண்டிருக்கும் ரீதியைப் பார்த்தால், அவர்களின் ஆராய்ச்சி எவ்வளவிற்கு இருக்கிறது என்று தெரியும். ஒரு விஷயத்தை எவ்வளவு ஸூக்ஷ்மமாகப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள்? அது கேவலம் பகவான் நமக்குக் கொடுத்த புத்தியின்

பிரபாவம்தானே! இப்படிப்பட்ட விசித்திரமான புத்தியை பகவான் மீதி பிராணிகளுக்குத் தரவில்லை. அதனால் மனுஷ்யன் ரொம்ப விவேகி. எது நல்லது, எது தவறு என்பதைத் தீர்மானம் செய்வதற்குச் சக்தி உள்ளவன். அப்படிப்பட்ட விவேகிகள் கோஷ்டியைச் சேர்ந்த நமக்கு ஈச்வர விஷயத்தில், அதிருஷ்ட விஷயத்தில் விசுவாசம் இல்லாமல் இருப்பது ரொம்ப அனுசிதம் (பொருத்தமில்லை).

அதேபோல் ஆசரணத்தைச் செய்ய வேண்டும். அதனால், எந்த விஷயத்திலும் நாம் செய்யக்கூடிய காரியத்திற்கு ஈச்வரனுடைய அனுக்ரஹம் ஒன்று இருக்க வேண்டும் என்கிற திடமான விசுவாசம் வர வேண்டும். அந்த விசுவாசம் இருந்தால் நாம் செய்யக்கூடிய காரியமெல்லாம் மிகவும் நன்றாக நடக்கும். ஈச்வரனை மட்டும் மறந்து விட்டு நாம் செய்யும் காரியம் ஒழுங்கான ரீதியில் நடக்காது. ஆகையால், பிரதியொருத்தனும் தன்னுடைய வாழ்க்கையில் தெய்வானுக்ரஹம் அவசியம் வேண்டும் என்கிற திடமான நிச்சயத்துடன் இருந்து தன்னுடைய வாழ்க்கையை நடத்தி சிரேயஸ்ஸை அடைய வேண்டியது என்று சொல்லி நான் என்னுடைய உபன்யாஸத்தை இங்கு முடிக்கிறேன்.

**ஹர நம: பார்வதீ பதயே ஹர ஹர மஹாதேவ ||**
**ஜானகீகாந்தஸ்மரணம் : ஜய ஜய ராம ராம ||**

## 13. பக்தியில் பல விதம்



**சரதிந்து விகாஸி மந்தஹாஸாம் ஸ்புரதிந்தீவரலோசனாபிராமாம் |**
**அரவிந்த ஸமான ஸுந்தராஸ்யாம் அரவிந்தாஸன ஸுந்தரீமுபாஸே ||**

பகவானுடைய அனுக்ரஹத்தைச் சம்பாதிப்பதற்கு முக்கியமான ஸாதனம் பக்தி ஆகும். பக்தி இருந்துவிட்டால் பிறகு வேறெந்த யோக்யதையும் ஒருவனுக்குத் தேவையில்லை. ஆதிசங்கரர் அதனால்தான்,

**பக்தி கின்ன கரோத்யஹோ வனசரோ பக்தாவதம்ஸாயதே ||**

என்று கூறினார். பக்தியின் மிகுதியால் காட்டிலிருக்கும் ஒரு வேடனும் எல்லோருடைய கௌரவத்திற்கும் பாத்திரமாகிவிடுகிறான். கண்ணப்பநாயனாரைப் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அவன் ஒரு வேடன். அவனுக்குப் படிப்பு உண்டா? ஆசாரம் உண்டா? பணம்தான் உண்டா? ஒன்றுமேயில்லை. ஆனால், அவனுக்கிருந்த பக்திக்கு அளவேயில்லை.

**மார்காவர்திதபாதுகா பசுபதேரங்கஸ்ய கூர்சாயதே** (தொடரும் .....)


Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita


## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

# என்றும் புதியவர்

## ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள்

## 2. பேரறிவு (மஹாப்ரக்ஞை)

### மஹாப்ரக்ஞை — கல்விசார் அறிவாற்றலுக்கு அப்பால்



மூன்றாவதாக, எந்த ஒரு குறிப்பிட்ட அறிவாற்றலின் வளர்ச்சியும் அடையாளம் காட்டக் கூடியதாக இருக்க வேண்டும். எல்லா மனிதர்களும் (இதில் அசாதாரணமானவர்களும் அடக்கம்) அந்த ஆற்றலின் பிறப்பிலிருந்து முழுமை வரை ஒரு வளர்ச்சிப் பாதையில் செல்கின்றனர். ஆதலால், அந்த ஆற்றலின் வல்லமை ஒருவருள் எப்படிப் படிப்படியாக வளர்கிறது என்பதைக் காணமுடியும். மேலும், எந்த அறிவாற்றலும் பொதுவாகத் தனிமையில் வளர்வதில்லை. எனவே அறிவாற்றல் எந்தச் சூழ்நிலையில் எந்த விதமாக வெளிப்படுகிறது என்பதையும் கூற இயலும். தவிரவும் அறிவாற்றல் என்பது ஒரு திறல் (potential) மட்டுமே. அது எல்லா நேரங்களிலும் வெளிப்பட வேண்டும் என்ற அவசியம் இல்லை.

இனி, பல அறிவாற்றல்களுக்கும் பன்முகத்தன்மை கொண்ட ஆளுமைக்கும் தொடர்பு என்ன என்பதைப் பார்ப்போம். பொதுவாக ஒருவருடைய அறிவாற்றலின் தாக்கம் அவரது ஆளுமையில் வெளிப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட அறிவாற்றல்கள் இருப்பின் அந்த ஆற்றல்கள் ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்டு வெளிப்படும் போது ஆளுமையில் வேறு பரிமாணங்கள் தோன்றுகின்றன. உதாரணமாக, கணிதத்தில் வல்லவர் நல்ல பேச்சாளராகவோ எழுத்தாளராகவோ இருந்தால் அவருடைய ஆளுமையில் "கணித ஆராய்ச்சியாளர்" என்ற பரிமாணத்துடன் "கணிதத்தைச் சாதாரண மக்களுக்கு எடுத்துச் சென்றவர்" என்ற பரிமாணமும் உண்டாக வாய்ப்பு இருக்கிறது. கார்ட்னரின் கோட்பாட்டின் படி, கணிதத்தில் வல்லமை என்பது தர்க்கம்-கணிதம் சார்ந்த அறிவாற்றலின் அறிகுறி. ஆனால் அதைப் பலருக்கும் விளங்குமாறு உரையாற்றுவதோ அல்லது புத்தகங்கள் எழுதுவதோ மொழி சார்ந்த அறிவாற்றலின் அறிகுறி. முதலாவது ஆற்றல் மட்டும் இருந்தால் இரண்டாவதும் இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆனால் ஒருவருக்கு இப்படி ஒன்றுக்கு மேற்பட்ட அறிவாற்றல்கள் இருந்தால் அவருடைய ஆளுமை

பன்முகத் தன்மையாக இருப்பதற்கு வாய்ப்புகள் அதிகம் என்பதைப் புரிந்து கொள்ளலாம். இதுவே ஆளுமைக்கும் அறிவாற்றலுக்கும் உள்ள தொடர்பு. இனி, இதை ஒட்டி ஆசார்யாளின் அறிவாற்றல்(களைப்) பற்றிப் பேசுவோம்.


## மஹாப்ரக்ஞை - தர்க்கம் சார்ந்த அறிவாற்றல்

முதலில் தர்க்கம் கணிதம் சார்ந்த அறிவாற்றலை எடுத்துக் கொள்வோம். இதில் முக்கியமான கூறுகள் நுண்மையாக்கம் (abstraction) மற்றும் காரண ஆய்வு (reasoning). ந்யாய (தர்க்க) சாஸ்திரத்திலும் இக்கூறுகள் முக்கியமானவை. ந்யாய (தர்க்க) சாஸ்திரத்தில் இந்த இரண்டு கூறுகளைக் கொண்டு நீண்ட வாதப் பிரதிவாதங்கள் தொடுக்கப் படுகின்றன. ந்யாய சாஸ்திரத்தில் ஆசார்யாளுக்கு இருந்த வல்லமை பற்றி அவருடைய கல்வியறிவைப் பற்றிப் பேசும் போது விவரமாகக் கூறினோம். அதனால் இந்த அறிவாற்றல் பற்றி இங்கே மீண்டும் பேச வேண்டிய அவசியம் இல்லை. தவிரவும், சாஸ்திர சர்ச்சைகளில் தர்க்கம் - கணிதம் சார்ந்த அறிவாற்றல் என்பது தனியாக வெளிப்படாது, மொழிசார் அறிவாற்றலுடன் சம்பந்தப்பட்டே வெளிவருகிறது. எனவே, நமது கவனத்தை மொழிசார் அறிவாற்றல் பக்கம் திருப்புவோம்.

## மஹாப்ரக்ஞை - மொழிசார் அறிவாற்றல்


மனித இனத்தில் பரவலாகக் காணப்படும் அறிவாற்றல் மொழிசார் அறிவாற்றலே. கார்ட்னர், இந்த அறிவாற்றலின் அடிப்படைக் கூறுகளாக ஒலியியல் (phonology), இலக்கண விதிகள் (syntax), சொற்பொருளியல் (semantics) மற்றும் வழக்கு (pragmatics) என்ற நான்கினைக் கூறுகிறார். பொதுவாக உலகில் உள்ள எந்த மனிதரும் இந்த நான்கும் சற்றும் இல்லாமல் திறம்படச் செயல்பட முடியாது. ஒரு சிறந்த புலவருக்கோ பேச்சாளருக்கோ இவை சிறப்பாக அமையும் என்பது வெளிப்படை. ஆனால் நம் போன்றவருக்கும் இவை ஓரளவு இருப்பதனாலேயே ஒரு நல்ல செய்யுளையோ ஒருவர் நன்றாக உரையாற்றுவதையோ ரசிக்க முடிகிறது. ஒரு சாதாரண மனிதருக்கே இந்த ஆற்றல் தேவையென்றால் மற்றவருக்கு உபதேசம் செய்யும் பொறுப்பு உள்ளவருக்கு இது தேவை மட்டுமல்ல, முக்கியமும் ஆகிறது. மேலும் பல்வேறு மொழிகள் பேசும் சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்ய வேண்டும் என்றால் இந்த ஆற்றல் ஒரு மொழியில் மட்டுமல்லாமல் ஒரு சில மொழிகளில் இருக்க வேண்டும்.

(தொடரும்.....) மிக்க நன்றி : Centre for Brahmavidya



Voice of Jagadguru

advaitam paramanandam an e-magazine on advaita



**ஸத் ஸம்ப்ரதாயம்**


An Unit of the e magazine Voice of Jagadguru)

## நீதி மஞ்ஜரீ

**ஶ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள் இயற்றியது.**

**அத்யாயம் - 7**

### பலன் கொடுப்பது கடவுளே





அன்று அகஸ்மாத்தாக ஒருபெரியதனிக மார்வாரி ஆலயத்திற்கு தரிசனத்திற்காக வந்து பார்க்கும்போது அர்த்த ஜாம பூஜையாகிக் கதவு சாற்றியிருப்பதைக் கண்டு வருத்தப்பட்டுக் கொண்டிருக்கும் போது கர்ப்பகிருஹத்தில் ஏதோ பேச்சுக் குரல் கேட்கிறதே என்று கவனித்தான். மேலே கண்ட ஸம்பாஷணை அவன் காதில் விழுந்தது. உடனே நம் பாக்கியம் தான் என்று நினைத்துக் கொண்டு வெளியில் வந்து அந்த பிச்சைக்காரனைத் தேடிப் பிடித்தான். "நித்தியம் கோவில் வாசலில் உட்கார்ந்து கொண்டு பிச்சையெடுத்துக் கஷ்டப்படுகிறான் என்று கேள்விப்பட்டேன். உனக்கு சராசரி என்ன கிடைக்கும்?" என்று கேட்டான். அதற்கு அந்த பிச்சைக்காரன் "ஸ்வாமி, நாலு அணா கிடைத்தால் அதிகம்" என்றான். "அப்படியானால் உனக்கு ஒரு ரூபாய் கொடுக்கிறேன். நாளைக்கு உனக்கு எவ்வளவு கிடைத்தாலும் எனக்கு அதை கொடுத்துவிடு" என்று மார்வாரி சொன்னான். இதைக் கேட்டதும் "மார்வாரிகளே பணவிஷயத்தில் நிரம்ப ஜாக்கிரதையென்று கேள்வி, ஆகையால் இவன் நமக்கு ஒரு ரூபாய் தருகிறேனென்று சொல்வதால் நமக்கு பிச்சையில் கட்டாயம் ஒரு ரூபாய்க்குமேல் கிடைக்குமென்று இவனுக்கு எப்படியோ தெரிந்திருக்கிறது.

இல்லாமல் போனால் நம்மிடம் வரமாட்டான்" என்று தீர்மானம் செய்து கொண்டான். மார்வாரியைப் பார்த்து "ஸ்வாமி, ஏதோ பகவான் எனக்குக் கொடுப்பது எனக்குப் போதும். நீங்கள் என் விஷயத்தில் நஷ்டப்படுவானேன்? நீங்கள் பத்து ரூபாய் கொடுத்தாலும் எனக்குத் தேவையில்லை" என்று சொல்லிவிட்டான். மார்வாரி "பத்து இல்லை. நூறு கேட்டாலும் கொடுக்கிறேன்" என்றான். "ஸ்வாமி, ஆயிரம் கொடுத்தாலும் எனக்கு வேண்டாம்" என்றே பிச்சைக்காரன் சொல்ல. நாளை லாபத்தில் சரிபாதி வரையில் கொடுத்தாலும் பாதகமில்லை என்று நினைத்துகொண்டு "ஐம்பதினாயிரம் கொடுக்கிறேன். நாளைக்கு உனக்குக் கிடைப்பதை எனக்குக்கொடு" என்று மார்வாரி வற்புறுத்துவதற்கும் பிச்சைக்காரன் இடங்கொடுக்காமலிருந்தான். இதைப் பார்த்துக் கொண்டிருந்த அவன் பெண்ஜாதி தன் பர்த்தாவைப் பார்த்து "இதுவரை நாம் அனுபவித்து வருகிற தாரித்ரியத்திற்கு ஐம்பதினாயிரம் ரூபாய் கிடைத்தால் போதாதா? இதற்கு மேல் தான் நமக்கு ஆசை எதற்காக? நாளை என்ன கிடைத்தாலும் இந்த மார்வாரி எடுத்துக் கொண்டு போகட்டும். தாங்கள் ஐம்பதினாயிரத்திற்கு ஸம்மதிக்கவில்லையென்று சொல்லிவிட்டபடியால் எழுபத்தையாயிரம் இவர் இப்பொழுதே கொடுத்தால் ஸம்மதித்து விடுங்கள்" என்று சொன்னாள். அதற்கு மார்வாரி ரூ.25000/-ஆவது லாபம் இருக்கிறது என்று நினைத்து "அப்படியே கொடுக்கிறேன். ஆனால் நாளை பிச்சை என்னுடையதாயிருப்பதால் நாளை ராத்திரி கோவில் அர்த்தஜாம பூஜை முடிந்து கதவு சாற்றும் வரையில் கோவில் வாசலில் உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டும். என் அனுமதியன்னியில் அக்கம்பக்கத்தில் போகக்கூடாது" என்று சொன்னான். பிச்சைக்காரனும் ஸம்மதித்து ரூ.75000/-த்தை வாங்கிக்கொண்டான்.

அப்படியே மறுநாள் காலை ஆறுமணிக்குப் பிச்சைக்காரன் தன் ஸ்தானத்தில் வந்து ஸன்னத்தமாய் உட்கார்ந்து கொண்டான். பக்கத்தில் ஒரு நாற்காலி போட்டுக்கொண்டு மார்வாரியும் உட்கார்ந்தான். யார் அந்தப் பக்கம் வந்தாலும் லஷரூபாய் கொண்டுவருகிற விநாயகர் இவராயிருக்கலாமோ இவரா யிருக்கலாமோயென்று ஒவ்வொருவராய்க் கவனித்த வண்ண மாகவேயிருந்தான். ஸாயங்காலம் அஸ்தமித்தது. நித்தியம் கிடைத்த கால் ரூபாய் கூட வரவில்லை. பிச்சைக்காரனுக்குப் பசி. மார்வாரிக்குக் கோபம். பிச்சைக்காரனைச் சாப்பிடக்கூடப் போகக்கூடாதென்று தடுத்துவிட்டான். ராத்திரி பத்துமணி, பதினோருமணியும் ஆகிவிட்டது. பிச்சையில் ஒன்றும் விழவில்லை.

(தொடரும் ...) மிக்க நன்றி : ஸ்ரீ ஞானானந்த பாரதீ க்ரந்த ப்ரகாசன ஸமிதி

**ஸத் ஸம்ப்ரதாயம்**

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ||श्रीशारदास्तोत्रम्||

## श्रीशृङ्गाद्रौ श्रीशारदानवरात्रोत्सवसमये

## ஶ்ரீஶாரதா³ஸ்தோத்ரம்

## (ஶ்ரீ சிருங்க கிரியில் சாரதாநவராத்திரியின்போது)

**(ஶ்ரீ சிருங்ககிரி ஶ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஶ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகள் இயற்றியது)**

मत्पादाब्जप्रणम्रं नरमतितरसा सेवते चेभमुख्या
लक्ष्मीर्हस्ताग्रराजद्वरकनकमयस्रग्धरेत्येव बोधम् ।
कर्तुं हस्ताग्रराजद्वरकनकसरं नागराजं प्रधत्से
वाणि प्रब्रूहि किं त्वं कमलजहृदयाम्भोजसूर्यप्रभे मे ||६५||



மத்பாதா³ப்³ஜப்ரணம்ரம்’ நரமதிதரஸா ஸேவதே சேப⁴முக்²யா
லக்ஷ்மீர்ஹஸ்தாக்³ரராஜத்³வரகனகமயஸ்ரக்³த⁴ரேத்யேவ போ³த⁴ம் |
கர்தும்’ ஹஸ்தாக்³ரராஜத்³வரகனகஸரம்’ நாக³ராஜம்’ ப்ரத⁴த்ஸே
வாணி ப்ரப்³ரூஹி கிம்’ த்வம்’ கமலஜஹ்ரு’த³யாம்போ⁴ஜஸூர்யப்ரபே⁴ மே ||65||

பிரும்மாவின் இதய கமலத்தை ஸூரிய ஒளியாகி மலரச் செய்பவளே! வாணி! "என் சரணகமலத்தை வணங்கி நிற்கிற மனிதனுக்கு, யானையை முன்னிட்டு வருகிற லக்ஷ்மி, தன் கை நுனியில் விளங்குகிற தங்கத் தாமரை மாலை ஏந்தியவளாகப்பணிவிடை புரிகிறாள்" எனக் காட்ட, துதிக்கையின் நுனியில் தங்கத் தாமரையாலான மாலை ஏந்திய யானையை முன் நிறுத்தியுள்ளாய். அவ்வாறு தானே! சொல்வாய். (யானை வாகனக் காட்சி (65)

एकः शुकः प्रसिद्धोऽस्ति पाराशर्यसुतः किल।
शुकोऽपरस्तु को ब्रूहि शारदे प्रणताय मे ||६६||
ஏக: ஶுக: ப்ரஸித்³தோ⁴(அ)ஸ்தி பாராஶர்யஸுத: கில.

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)



ஶுகோ(அ)பரஸ்து கோ ப்³ரூஹி
ஶாரதே³ ப்ரணதாய மே ||66||

சாரதே! பராசரரின் மகனான வியாஸரின் மகன் சுகர் எனப்புகழ் பெற்றவர். வணங்கி நிற்கிற எனக்கு மற்றொரு சுகர் (கிளி) யார் எனக்கூறுவாய். (66)

एकं शरीरं परिगृह्य पूर्वभवे शुकोऽयं
कृतवान्विचारम्।
मोक्षाय नालं स इतीह देहद्वयं गृहीत्वा
किमु सेवते त्वाम् ||६७||

ஏகம்' ஶரீரம்' பரிக்³ரு'ஹ்ய
பூர்வப⁴வே ஶுகோ(அ)யம்'
க்ரு'தவான்விசாரம் |
மோக்ஷாய நாலம்' ஸ இதீஹ
தே³ஹத்³வயம்' க்³ரு'ஹீத்வா கிமு
ஸேவதே த்வாம் ||67||

சுகர் முன்னொரு உடலை ஏற்று முன் பிறவியில் ஆத்மவிசாரம் செய்தார். அது முக்தி பெறப்போதவில்லை. அதனால் இருகிளிகளாகி உன்னை வழிபடுகிறாரோ? (67)

दन्तेषु किं दाडिमबीजबुद्ध्या तवाधरे
बिम्बधियाऽथवाऽयम् ।
शुकः कुतस्त्वन्निकटे चकास्ति सन्देहयुक्ताय वदाशु मातः ||६८||

த³ந்தேஷு கிம்' தா³டி³மபீ³ஜபு³த்³த்⁴யா தவாத⁴ரே பி³ம்ப³தி⁴யா(அ)த²வா(அ)யம் |
ஶுக: குதஸ்த்வந்நிகடே சகாஸ்தி ஸந்தே³ஹயுக்தாய வதா³ஶு மாத: ||68||

தாயே/ பற்களை மாதுளம் விதை என்று எண்ணியோ, உன் உதட்டை கோவைப்பழம் என்று எண்ணியோ, கிளி உன் அருகில் வந்ததோ! ஐயப்படுகிற எனக்கு விளக்கம் தருவாய்.(68)

(தொடரும் ...)

ஸத் ஸம்ப்ரதாயம்
An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஶ்ரீமத் அத்யாத்ம ராமாயணம்

## பாலகாண்டம்

### மூன்றாவது ஸர்கம்

ராமன், லட்சுமணனோடு கூட, குழந்தைத்தனமான விளையாட்டுக்களாலும், அங்க அசைவுகளாலும் மழலைப் பேச்சினாலும் பெற்றோர்களை மகிழ்ச்சியுறச் செய்தார். முத்துக்கள் இழைக்கப்பட்டுப் பொன்னாலான நெற்றிச் சுட்டி நெற்றியில் விளங்க, ரத்தினங்களும் வைரங்களும் இடைஇடையே கோர்க்கப்பட்ட மாலையாக புலிநகம் கழுத்தில பளிச்சிட, அர்ஜுன மரத்தின் பிஞ்சுகளைப் போன்று தங்கக் குண்டலங்கள் செவிகளில் அசைந்தாட. வைரம் இழைத்த பாதச் சிலம்பு, இடையில் ரத்தின அரைஞாண், புஜங்களில் தோள்வளைகள் கிண்கிணிக்க, புன்னகை தவழும் முகம், ஓரிரு பற்கள், இந்த்ர நீல மணி போன்ற மேனிப் பிரகாசம் - (இத்தகைய தோற்றப் பொலிவுடன்) அரச மாளிகையின் எல்லாப் பகுதிகளிலும், குதிரைக் குட்டியின் பின்னால், தளர் நடை நடந்து, ஓடிச் சுற்றிவரும் ராமனைக் கண்டு தசரத மன்னனும் கௌசல்யையும் மிகவும் ஆனந்தப்பட்டார்கள்.

உணவருந்தப் போகும் சமயத்தில், வா வா என்று. ராமனைப் பார்த்து (மகிழ்ச்சியும் பாசமும் பொங்க) பல தடவைகள் தசரதன் அழைத்த போதிலும் விளையாட்டுத்தனத்தால், அவன் வரமாட்டான். கௌசல்யையைப் பார்த்து, 'அவனை அழைத்துக் கொண்டு வா' என்பார். அவள் சிரித்துக் கொண்டே அவனைப் பிடிக்க ஓடினாலும், யோகிகளின் இதயத்தில் வசப்பட்டுக் கிடக்கும் அவனை, தொடக்கூட முடிவதில்லை! (ஆனால், தாயின் தவிப்புக்கு இரங்கி) புழுதிபடிந்த கைகளுடன், புன்சிரிப்புப் பொங்க அவனாகவே ஓடி வருவான்! (வந்து) ஒரு கவளம் சாப்பிட்டுவிட்டு மறுபடியும் ஓடிப் போய்விடுவான்! அன்னை கௌசல்யை மாதந்தோறும் அவன் வளர்ச்சிக்கு ஏற்றபடி விதம்விதமாக அலங்காரம் செய்து, பலவகைத் தின்பண்டங்கள் செய்து கொடுத்து விழாக் கொண்டாடினாள்.


ஓர் ஆண்டு முடிவில், வடை, கொழுக்கட்டை, முறுக்கு, ஜிலேபி முதலிய பலவிதமான இனிப்புப் பண்டங்கள் செய்து (எல்லோருக்கும் கொடுத்து) ஆண்டுநிறைவைக் கொண்டாடினாள். ராமன் பேரில் ஏற்பட்ட தாயன்பினால், வீட்டு வேலைகள் செய்வதையே அவள் விட்டுவிட்டாள். ஒரு நாள் ராமன் தன் அம்மாவிடம் வந்து, 'எனக்கு ஏதாவது திங்கக்கொடு' என்றான். ஆனால் வேறு எங்கோ மனத்தைச் செலுத்தியிருந்த அவள் அதைக் காதில் வாங்கிக்

கொள்ளவில்லை. உடனே, கோபம்கொண்டு, தடியினால் எல்லாப் பாத்திரங்களையும் நொறுக்கித் தள்ளினான, ராமன்!

உறியில் இருந்த நெய்யையும் வெண்ணெயையும் கீழே சாய்த்தான். லட்சுமண-பரத-சத்ருக்னர்களுக்கு வரிசையாகப் பகிர்ந்து கொடுத்தான். சமையற்காரன் சென்று கௌசல்யையிடம் புகார் செய்தவுடன், அவள் சிரித்துக் கொண்டே ஓடி வந்தாள். அவள் வருவதைக் கண்டவுடன், எல்லாச் சிறுவர்களும் ஓடியே போய்விட்டார்கள்! (துரத்திக் கொண்டு) அவள் ஓடி வந்த போது, ஒவ்வொரு அடியிலும் கால் தடுக்கித் தடுக்கி விழுந்தாள். அம்மாதரசி (ஒரு வழியாக) ராமனின் கையைப் பிடித்தே விட்டாள். அவள் எதுவுமே பேசவில்லை. (ஆனால், ராமனோ) தன்னுடைய வெளிப்படுத்துவது போல மெல்ல மெல்ல விசும்பினான். குழந்தைத்தனத்தை அவர்கள் பயந்து நடுங்குவதைப் பார்த்து (உள்ளம் நெகிழ்ந்து) பாசத்துடன் அவர்களைக் கட்டியணைத்துக் கொஞ்சினாள். இவ்விதமாக, உலக மக்களுக்கெல்லாம் மகிழ்ச்சியை அளிப்பவரும், பேரானந்தச் செறிவினருமான ராமன். மாயையை ஏற்று, இளம்பருவத்தினனாக மேனி வடிவம் கொண்டு, ராஜ தம்பதிகளை சந்தோஷப்படுத்தினான். காலம் செல்லச் செல்ல அவர்கள் எல்லோரும் வாலிபப் பருவத்தை அடைந் தார்கள்.

அவர்கள், வசிஷ்டரால் உபநயனம் செய்விக்கப்பட்டார்கள்; எல்லாக் கலைகளிலும் வல்லவர்கள் ஆனார்கள் வெறும் லீலையாக மானுட வடிவம் ஏற்றுள்ள, உலகங்களுக் கெல்லாம் தலைவர்களான அவர்கள், வில்வித்தையில் தலை சிறந்தவர்களாகவும் எல்லா அறநூல்களின் உட்கருத்தை அறிந்தவர்களாகவும் ஆனார்கள். லட்சுமணன். எப்போதும் பணிவுடன், எஜமானர் - பணியாள் என்ற உணர்வுடன் பின்பற்றி வந்தான்; அவ்வாறே சத்ருக்னன் பரதனிடம் (தலைவர் தொண்டன் என்ற உறவுடன்) நடந்து கொண்டான். கையில் வில் தாங்கியவனாக. குதிரை மீதேறி லட்சுமணனோடு கூட காட்டுக்குச் செல்வான், ராமன். ஏராளமான துஷ்ட விலங்குகளைக் கொன்றுவிட்டு வந்து, எல்லாவற்றையும் தந்தையிடம் விவரிப்பான். விடியற்காலையில் (படுக்கையிலிருந்து) எழுந்ததும், நீராடிவிட்டு, அடக்கத்துடன் பெற்றோர்களுக்கு நமஸ்காரம் செய்தபின், நகர மக்களின் (நல்வாழ்வுக்கான) பணிகளை அவர்கள் செவ்வனே செய்து வந்தார்கள்.


தினந்தோறும், பந்துக்களுடன் கூட உணவருந்திய பின்னர், ராமன் முனிவர் களிடம் தர்மசாஸ்திரங்களின் நுட்பங்களைக் கேட்டு அறிவதோடு, தாமும் விளக்கிக் கூறுவார். விகாரமற்றவரும் மாறுதல்களுக்கு உட்படாதவருமான பரமாத்மா மனிதனாக அவதாரம் செய்து, இவ்வாறாக உலக நியதியை அனுசரித்து எல்லாக் காரியங்களையும் செய்து வந்தார். (ஆனால், ஆழமாகச்) சிந்தித்துப் பார்த்தால், அவர் ஏதும் செய்யவேயில்லை.



# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

**உமா-மகேசுவரர்களுக்கிடையே நிகழ்ந்த உரையாடலான ஸ்ரீமத் அத்யாத்ம ராமாயணம் பால காண்டம் மூன்றாவது ஸர்கம் முற்றிற்று.**

(தொடரும்…)

Our Website link : https://www.voiceofjagadguru.com/
Telegram Channel : https://t.me/voiceofjagadguru

Instagram Channel :

https://www.instagram.com/stories/voice_of_jagadguru_voj/3601249542534134684?igsh=MW90YW13N2c5b2hqaA==

WhatsApp Community Channel: https://chat.whatsapp.com/Ly4wlaTu8Kc3sjjEYU8KGu

YouTube Channel : https://youtube.com/@jagad-guru-channel?si=brkLFqiz8sZJ6UIl

Facebook link : https://www.facebook.com/share/1Du5xkve4e/

For free e magazines : Our Mail ID : Info@voiceofjagadguru.com

| Editorial Board | | |
|---|---|---|
| Sri P A Murali | Hon' Advisor | Administrator & CEO, Sri Sringeri Mutt & It's Properties, Sringeri |
| Sri S N Krishnamurthy | Hon' Editor | Sri Sringeri Mutt, Sringeri |
| Sri Tangirala Shiva Kumara Sharma | Hon' Editor | Sri Sringeri Mutt, Sringeri |
| PujyaSri Swami Guruparananda | Hon' Editor | Founder Acharya, Poornalaya & Mentor Sri Swami Chidbhavananda Ashram, Vedapuri, Theni. |
| Sri B Vijay Anand | Web Director | Coimbatore |
| Smt B Srimathi Veeramani | Web Asst Director & Chief Editor | Tirunelveli |
| K M Kasiviswanathan | Hon' Editor | Tirunelveli |